**சுருக்கம்**

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை – தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் – 2020-21-ஆம் ஆண்டு வரவு செலவு திட்டக் கூட்டத்தொடரின்போது வெளியிடப்பட்ட அறிவிப்பு – கேபிள் டிவி தொழிலாளர்கள் நல வாரியம் என்பதனைத் "தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நல வாரியம்" எனப் பெயர் மாற்றம் செய்தல் – தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமித்தல் – நல உதவிகளுக்கான வழிகாட்டி நெறிமுறைகள் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் (அ1) துறை**

**அரசாணை (நிலை) எண். 03** **நாள்: 13.01.2024**

**சோபகிருது, மார்கழி – 28,**

**திருவள்ளுவர் ஆண்டு –2054.**

**படிக்கப்பட்டது:**

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித எண்.10731/B1/TACTV/2017, நாள் 10.11.2023.

****

**ஆணை:**

2020-21-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டக் கூட்டத்தொடரின்போது மாண்புமிகு அமைச்சர் (தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்:-

**கேபிள் டிவி தொழிலாளர்கள் நல வாரியம் என்பது தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நல வாரியம் எனப் பெயர் மாற்றம் செய்து அமைக்கப்படும்.**

2. இது தொடர்பாக, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் அனுப்பியுள்ள கருத்துருவில், "கம்பிவடத் தொலைக்காட்சித் தொழிலாளர்கள் நலவாரியம்" என்பதனை **"தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலவாரியம்"** எனப் பெயர் மாற்றம் செய்யவும், வாரியத்திற்கான தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமனம் செய்யவும், வாரியத்தின் உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிட விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து உரிய ஆணை வெளியிடவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காணும், கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்கலாம் என முடிவு செய்து, கம்பிவடத் தொலைக்காட்சித் தொழிலாளர்கள் நலவாரியம் என்பதனைத் **"தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலவாரியம்"** எனப் பெயர் மாற்றி அமைத்தும், தலைவர் மற்றும் அலுவல்சார் அலுவல்சாரா உறுப்பினர்களை நியமித்தும், உறுப்பினர் சேர்க்கை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்தும், இதன்மூலம் ஆணையிடுகிறது. இந்நலவாரியம் கீழ்க்காணும்

அலுவல்சார்ந்த உறுப்பினர்களையும், அலுவல்சாரா உறுப்பினர்களையும் கொண்டிருக்கும்:-

| வ.எண் | பெயர் | பதவியின் பெயர் |
|---|---|---|
| 1. | திரு.ஜீவா,<br>தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர் சங்க மாநிலப் பொதுச் செயலாளர்,<br>எண்.20, செந்தில் நகர்,<br>மாரியம்மன் கோவில் தெரு, தஞ்சாவூர். | தலைவர் |
| 2. | பொது மேலாளர் (நிர்வாகம்),<br>தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம். | உறுப்பினர் செயலர் |
| 3. | அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை | அலுவல் சார் உறுப்பினர்கள் |
| 4. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,<br>தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை. | |
| 5. | தலைவர்,<br>தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழக நிறுவனம். | |
| 6. | மேலாண்மை இயக்குநர்,<br>தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் | |
| 7. | திரு. காயல் இளவரசு,<br>மாநிலத் தலைவர்,<br>தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்கம். | அலுவல் சாரா உறுப்பினர்கள் |
| 8. | திரு. வி. பாலாஜி<br>க.எண். 67 ஏ, தேமையன் வீதி-2,<br>கவுண்டம்பாளையம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம். | |
| 9. | திரு.கு. அசோகன்,<br>எண்.40, மல்லப்பன் தெரு,<br>விருதுநகர் மாவட்டம். | |
| 10. | திரு. மு. துரைராஜ்,<br>எண்.2/622, முத்தையா நகர்,<br>செட்டிமண்டபம், கும்பகோணம் தாலுகா,<br>தஞ்சாவூர் மாவட்டம். | |
| 11. | திரு.சு. வினோ ஜோஸ்,<br>கனியாகுளம், பாறையடி<br>வடசேரி, கன்னியாகுமரி மாவட்டம். | |
| 12. | திரு. ச. ஆத்மா ராம்,<br>த/பெ. சம்பத்,<br>C-15-01,TAISHA, AIS அலுவலர்கள் குடியிருப்பு,<br>மேற்கு நடேசன் நகர்,<br>விருகம்பாக்கம், சென்னை-92. | |

**வழிகாட்டு நெறிமுறைகள்:–**

அ) இத்தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நல வாரியம் சட்டமுறை சாராத **(Non–Statutory)** வாரியமாகச் செயல்படும். இவ் வாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாகும்.

**ஆ. கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் அவர்களது தொழிலாளர்களின் பதிவு மற்றும் அடையாள அட்டைகளை வழங்குவதற்கான கண்காணிப்பு (Nodal) அலுவலர்:**

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் தனி வட்டாட்சியர் / துணை மேலாளர், நல வாரியத்தின் உறுப்பினர்கள் சேர்க்கைக்கான கண்காணிப்பு (Nodal) அலுவலராகச் செயல்படுவார்.

**இ. நலவாரியத்தில் தொழிலாளர்களைச் சேர்ப்பதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:**

சந்தாதாரர்கள் அடிப்படையில், உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு உதவிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கீழ்க்கண்டவாறு வரையறை செய்யலாம்:–

(i) 500 எண்ணிக்கையிலான சந்தாதாரர்களைக் கொண்ட உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர் – 1 தொழிலாளர்.

(ii) 501 முதல் 1000 எண்ணிக்கை வரை சந்தாதாரர்களைக் கொண்ட உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர் – 2 தொழிலாளர்கள்

(iii) 1000–க்கும் மேற்பட்ட சந்தாதாரர்களைக் கொண்ட உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர் – 3 தொழிலாளர்கள்.

**ஈ. தகுதி:**

(i) கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் அவர்களது தொழிலாளர்கள் 18 வயது நிறைவடைந்து 60 வயதுக்கு மிகாமல் இருப்பவர்கள் நல வாரியத்தில் உறுப்பினராகச் சேரத் தகுதியுடையவர்கள்.

(ii) கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் அவர்களது தொழிலாளர்கள் அரசால் அமைக்கப்பட்டுள்ள வேறு எந்த நல வாரியத்திலும் உறுப்பினராக இருக்கக்கூடாது.

(iii) நல வாரிய உறுப்பினர்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தங்கள் உறுப்பினர் அட்டையை இலவசமாகப் புதுப்பிக்க வேண்டும்.

**உ. உறுப்பினர் கட்டணம்:**

(i) நல வாரியத்தில் உறுப்பினராக விரும்பும் கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்களிடம் வாழ்நாள் உறுப்பினர் கட்டணமாக ரூ.200/– வசூலிக்கப்படும்.

(ii) தற்போதுள்ள உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்கள், டிஜிட்டல் பிளாட்பாரமில் உள்ளவர் மற்றும் அவர்களது தொழிலாளர்கள் ஆகியோரிடமிருந்து தொடக்கக்கால வாழ்நாள் உறுப்பினர்

கட்டணம் வசூல் செய்யப்படும் தொகை ரூ.1.20 கோடியாக இருக்கும்.

(iii) வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நலத்திட்ட உதவிகளுக்கு, ஆண்டுதோறும் ரூ.25 இலட்சம் மானியத் தொகை அரசு நிதியிலிருந்து வழங்கப்படும்.

**ஊ . திட்டங்களுக்கான விண்ணப்பம் மற்றும் ஒப்புதல்:**

அனைத்து வகையான நலத்திட்டங்களுக்கும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவன இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யக்கூடிய தனித்தனி விண்ணப்பப் படிவங்கள் இருக்கும். அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கேபிள் டிவி தனி வட்டாட்சியர்கள் / துணை மேலாளர்கள் விண்ணப்பங்கள் மற்றும் ஆவணங்களைச் சரிபார்த்து, குறிப்பிட்ட நலத்திட்டத்தைப் பெறுவதற்கான தகுதியின் அடிப்படையில் வாரியத்திற்குப் பரிந்துரைப்பார்கள். ஆன்லைன் மூலம் சரிபார்ப்புகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில், RTGS / NEFT மூலம் நிவாரணத்தொகை நேரடியாக உறுப்பினர்கள் / நாமினி / சட்டபூர்வ வாரிசு ஆகியோரின் வங்கிக் கணக்கில் சேர்க்கப்படும்.

**4. தமிழ்நாடு கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்பவர்களுக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் கீழ்க்காணும் பல்வேறு நலத்திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன:-**

| வ.எண் | நலத்திட்டங்கள் | நலத்திட்ட உதவிகள் | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1. | திருமண உதவித் தொகை | ஆண் | 3,000/- |
| | | பெண் | 5,000/- |
| 2. | மகப்பேறு உதவித் தொகை | மகப்பேறு | 6,000/- |
| | | கருக்கலைப்பு/ கருச்சிதைவு | 3,000/- |
| 3 | கல்வி உதவித் தொகை | அ) 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு | 1,000/- |
| | | ஆ) 10 ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/- |
| | | இ) 10 ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,000/- |

| | | | |
|---|---|---|---|
| | | ஈ) 11 ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/- |
| | | உ) 12 ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,500/- |
| | | ஊ) 12 ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,500/- |
| | | எ) முறையான பட்டப்படிப்பு / விடுதியில் தங்கிப் படித்தால் | 1,500/-<br>1,750/- |
| | | ஏ) முறையான பட்டமேற்படிப்பு / விடுதியில் தங்கிப் படித்தால் | 4,000/-<br>5000/- |
| | | ஐ) தொழில்நுட்பப் பட்டப்படிப்பு / விடுதியில் தங்கிப் படித்தால் | 4,000/-<br>6,000/- |
| | | ஒ) தொழில்நுட்பப் பட்டமேற்படிப்பு/ விடுதியில் தங்கிப் படித்தால் | 6,000/-<br>8,000/- |
| | | ஓ) ஐடிஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு / விடுதியில் தங்கிப் படித்தால் | 1,000/-<br>1,200/- |
| 4. | **தனிநபர் விபத்து உதவி** | விபத்து மரண நிதி உதவி | 1,25,000/- |
| | | விபத்து ஊன நிதி உதவி (ஊனத்தின் தன்மைக்கேற்ப) | 1,00,000/- வரை |
| 5. | **இயற்கை மரண உதவித்தொகை** | இயற்கை மரணம் | 30,000/- |
| 6. | **ஈமச்சடங்கு உதவித்தொகை** | ஈமச்சடங்கு | 5,000/- |

5. இவ்வரசாணை நிதித் (தொழில்கள்) துறையின் அ.சா.கு. எண். PROJ/2/2023, நாள் 13.1.2024-இல் பெற்ற இசைவின்படி வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தீரஜ் குமார்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

**பெறுநர்**
திரு.ஜீவா,
தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர் சங்க மாநிலப் பொதுச் செயலாளர்,
எண்.20, செந்தில் நகர், மாரியம்மன் கோவில் தெரு, தஞ்சாவூர்.

பொது மேலாளர் (நிர்வாகம்),
தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்,
அண்ணா சாலை, சென்னை – 600 002.

அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.

தலைவர்,
தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழக நிறுவனம்,
சென்னை-600 002.

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்,
சென்னை-600 002.

திரு. காயல் இளவரசு,
மாநிலத் தலைவர்,
தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்கம்.

திரு. வி. பாலாஜி,
க.எண். 67 ஏ, தேமையன் வீதி-2, கவுண்டம்பாளையம்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

திரு. கு. அசோகன்,
எண்.40, மல்லப்பன் தெரு, விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

திரு. மு. துரைராஜ்,
எண்.2/622, முத்தையா நகர், செட்டிமண்டபம், கும்பகோணம் தாலுகா, தஞ்சாவூர் மாவட்டம்.

திரு.சு. வினோ ஜோஸ், கனியாகுளம், பாறையடி வடசேரி, கன்னியாகுமரி மாவட்டம்.

திரு. ச. ஆத்மா ராம், த/பெ. சம்பத்,
C-15-01, TAISHA, AIS அலுவலர்கள் குடியிருப்பு,
மேற்கு நடேசன் நகர், விருகம்பாக்கம், சென்னை-600 092.

கணக்குத் தணிக்கை அலுவலகம், தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009 / 600 018.

சம்பளக் கணக்கு அலுவலர், தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009. (2 நகல்கள்)

பிரிவு அலுவலர் (பட்டியல்), தகவல் தொழில்நுட்பவியல் (ம) டிஜிட்டல் சேவைகள் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

**நகல்**

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை – 600 009.

மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

மாண்புமிகு அமைச்சர் (தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்) அவர்களின் சிறப்புநிலை நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

நிதித்துறை (தொழில்கள்/BPE), தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை – 600 009.

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்

அனைத்து தலைமைத் துறைகள்.

இருப்புக் கோப்பு / உதிரி

**//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//**

13/01/2024

**பிரிவு அலுவலர்**